கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் மற்றும் அத்தியாவசியப்பண்டங்கள் சட்ட வழக்கு மற்றும் போதைப்பொருள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்கள் சட்ட வழக்கு தனி நீதிமன்றம், புதுக்கோட்டை.

Present: Thiru. T. Panneerselvam, M.BA.,M.L.,
Additional District and Sessions Judge / Presiding Officer,
Special Court for E.C. and NDPS Act Cases, Pudukkottai.

Thiruvalluvar Aandu 2057 Shri Visuvavasu Varudam Panguni Thingal 09th day

Monday the 23rd day of March 2026

சிஆர்எம்பி 185/2026

முத்துமணிகண்டன்,
த/பெ. சாமிதுரை. மனுதாரர்– வாகன உரிமையாளர்– எதிரி

–எதிர்–

The Inspector of Police
Ramanathapuram Town P.S. in Cr.No.316/2024. ... எதிர்மனுதாரர்/புகார்தாரர்.

இம்மனு இன்று 23.03.2026 –ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்/வாகன உரிமையாளர்/எதிரி தரப்பில் வழக்கறிஞர்திரு. கே. சண்முகசுந்தரம்,பி.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும் , எதிர்மனுதாரர்/புகார்தாரர் அரசுதரப்பில் வழக்கறிஞர் திரு. எம். பாலசுப்ரமணியன் , எம்.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதுரைகள் கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இந்நாள் வரை எனது சீரிய பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உத்தரவு

1. மனுவின் சுருக்கம்

இராமநாதபுரம் நகர் காவல் நிலைய குற்ற எண். 316/2024 வழக்கில் இந்த மனுதாரர் /வாகன உரிமையாளர்/எதிரிக்கு சொந்தமான TN 11C 4153 நான்கு சக்கர வாகனம் volkswagen மனுதாரர்/வாகன உரிமையாளர்/ எதிரிக்கு சொந்தமானதாகும். மேற்படி வழக்கின் மனுதாரர்/வாகன உரிமையாளர்/ எதிரியிடமிருநது கைப்பற்றி சமூக

நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு இராமநாதபுரம் நகர் காவல் நிலையம் வசம் ஒப்படைக்கப்பட்டு பாதுகாப்பில் இருந்து வருகிறது. TN 11C 4153 நான்கு சக்கர வாகனம் volkswagen வழக்கு விசாரணை முடியும் வரையில் தொடர்ந்து எதிர்மனுதாரர் பராமரிப்பதென்பது இயலாது என்பதும் மனுதாரர் /வாகன உரிமையாளர்/ எதிரி வசம் இடைக்காலமாக ஒப்படைத்து உத்தரவிடக்கோரி பிரிவு 503 & 497 BNSS Act ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார்.

2. மனுதாரர் வசம் வழக்கு சொத்தினை ஒப்படைக்க அரசு தரப்பில் கடுமையான ஆட்சேபனையில் TN 11 C 4153 நான்கு சக்கர வாகனம் volkswagen–ஐ எதிரியிடம் ஒப்படைத்தால் விற்று விடவோ, உருமாற்றம் செய்யவோ அழித்து விடவோ வாய்ப்புள்ளதால் மேலும் வழக்கானது புலன் விசாரணையில் இருந்து வருவதால் எதிரியிடம் வழக்கு சொத்தை ஒப்படைக்க கடும் ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது.

3. இந்த மனுவை அனுமானிக்க போதிய காரணங்கள் உண்டா என்பதை ஆராய வேண்டும்.

4. இருதரப்பு வாதங்களையும் ஆராயும்போது மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரரால் கைப்பற்றிய TN 11C 4153 நான்கு சக்கர வாகனம் volkswagen நீதிமன்றத்தில் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி அவற்றை வெறுமனே வைத்திருப்பதால் வழக்கில் எந்த மாற்றமும் ஏற்படபோவதில்லை. TN 11C 4153 நான்கு சக்கர வாகனம் volkswagen ஒப்படைக்க எந்த நிபந்தனைக்கும் உட்படுவேன் என்று மனுதாரர்/வாகன உரிமையாளர்/எதிரி தரப்பில் வாதம் எடுத்து வைக்கப்பட்டது.

5. அரசு தரப்பில்ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது.

6. மேற்படி வாதங்களை ஆராயும்போது u/s 8(c) r/w 20(b)(ii)(B),25 of NDPS Act 1985 –ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும் கஞ்சா கடத்தல் வழக்கில் மேற்படி TN 11C 4153 நான்கு சக்கர வாகனம் volkswagen சம்பந்தப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் மனுவுடன் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் தான் மேற்படி வாகன உரிமையாளர் என்று குறிப்பிட்டு கூறியுள்ளார். எதிர்மனுதாரர் தன்னுடைய ஆட்சேபனையில் மேற்படி வாகனம் கைப்பற்றப்பட்டு ஆர்பி எண்.77/2025 –ல் ஆஜர்படுத்தப்பட்டு தற்போது மேற்படி வாகனத்தை sec.52(A) NDPS Act படி C.No.A3/6389/2024 Dt:30.08.2025 பிரகாரம் முறைப்படி Drugs Disposal Committee வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதால் எதிரியிடம் வாகனத்தை ஒப்படைக்க கடுமையாக ஆட்சேபனை செய்யப்படுகிறது மற்றும் வழக்கு புலன் விசாரணையில் இருக்கின்ற சுழ்நிலையை கருத்தில் கொண்டு தற்போதைக்கு இந்த மனுவை தள்ளுபடி செய்வது நீதியின் நலனுக்கு உகந்தது என்று தீர்மானிக்கப்படுகிறது.

7. இறுதியாக இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவை என்னால் சுருக்கெழுத்து/ தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 23ம் நாள் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/–T. Panneerselvam
தலைமை ஏற்பவர்/ கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு
நீதிபதி/சிறப்பு நீதிமன்றம், புதுக்கோட்டை

நகல் –

1) திரு.எம் .பாலசுப்ரமணியன். அரசு சிறப்பு பொது வழக்கறிஞர்

2) காவல் ஆய்வாளர், இராமநாதபுரம்  காவல் நிலையம்

3) மனுதாரர்/எதிரி

T PANNEERSELVAM

Digitally signed by T PANNEERSELVAM
Date: 2026.03.23 18:55:32 +0530